# மானாமதுரையில் போலீஸ் தாக்கியதால் இளைஞர் உயிரிழப்பு?

etvbharat.com/ta/state/relatives-alleged-lockup-death-as-youth-died-during-police-interrogation-in-manamadurai-tamil-nadu-news-tns26030802038

ETV Bharat March 8, 2026

## விசாரணைக் கைதி ஆகாஷ் டெலிசன் சிகிச்சை பலனின்றி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.



கோப்புப்படம் (IANS)

Published : March 8, 2026 at 2:30 PM IST

**சிவகங்கை:** மானாமதுரையில் போலீசார் தாக்கியதால், 26 வயது இளைஞர் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில்வே காலனி பகுதியில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு, ஜீவா நகரைச் சேர்ந்த ஜெயக்குமார் மற்றும் ஆதனூரை சேர்ந்த அழகர் ஆகியோரை பட்டாகத்தி மற்றும் அரிவாளால் தாக்கிய சம்பவம் தொடர்பாக காவல்துறைக்கு புகார் வந்தது. அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

விசாரணையின்போது, இந்த வழக்கில் தொடர்புடையதாக ஆகாஷ் டெலிசன் (26) என்ற பட்டியலினத்தைச் சேர்ந்த இளைஞரை மானாமதுரை போலீசார் பிடிக்க முயன்றுள்ளனர். அப்போது, ஆகாஷ்

மேலமடை மேம்பாலத்தில் இருந்து கீழே குதித்து தப்ப முயன்றதாகவும், அதில் அவருக்கு காலில் முறிவு ஏற்பட்டதாகவும் போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இதனால், காயமடைந்த ஆகாஷ் டெலிசனுக்கு முதலில் மானாமதுரை அரசு மருத்துவமனையிலும், பின்னர் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஆகாஷ் டெலிசனுக்கு நள்ளிரவில் திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அதையடுத்து, மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும், அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே, தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கு சரியில்லை என எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டி வரும் சூழலில், இந்த சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே, விசாரணையின்போது போலீசார் தாக்கி துன்புறுத்தியதால் தான் ஆகாஷ் டெலிசன் உயிரிழந்ததாக அவரது உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால், போலீசார் விசாரணைக் கைதிகளை கையாளும் விதம் குறித்து பெரும் விவாதம் எழுந்துள்ளது.

### தொடரும் லாக்- அப் மரணங்கள்?

காவல்துறையினர் தாக்கி விசாரணைக் கைதிகள் உயிரிழப்பது என்பது இது முதன்முறையல்ல. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் இந்தியா முழுவதும் 600-க்கும் மேற்பட்ட சம்பவங்களும், தமிழ்நாட்டில் 20-க்கும் மேற்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளது.

அதிலும், சாத்தான் குளம் ஜெயராஜ் - பெனிக்ஸ் (2020) உயிரிழப்பு, 2016-இல் சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் உயிரிழப்பு, சென்னையில் கஞ்சா வழக்கில் கைதான விக்னேஷ் (2022) மரணம், சமீபத்தில், திருட்டு குற்றச்சாட்டில் விசாரணை செய்யப்பட்ட மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் உயிரிழப்பு போன்றவை நாட்டையே உலுக்கியுள்ளது.

## கேள்விக்குறியான சட்ட ஒழுங்கு

சட்டப்படி, ஒரு விசாரணைக் கைதியை கைதுசெய்த 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். ஆனால், உண்மையை கண்டறிய வேண்டும் என்ற நோக்கில் சட்டத்தை கையிலெடுக்கும் போலீசார், விசாரணை என்ற பெயரில் தாக்குதல் நடத்துவதே இந்த மரணங்களுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இன்னும் பலரது லாக்-அப் மரணங்களுக்கு நீதி கிடைக்காத சூழலில், மீண்டும் ஒரு விசாரணைக் கைதி உயிரிழந்த சம்பவம் தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கை கேள்விக்குறியாக்கியுள்ளது. அதுமட்டுமின்றி, தேர்தல் நெருங்கும் சூழலில், இதுபோன்ற சம்பவம் தற்போதைய அரசுக்கு எதிராக திரும்பும் எனவும் கூறப்படுகிறது.

> Custodial death at Manamadurai Police Station, near Thriupuvanam. Akash Delison, a 26 year old dalit youth was beaten and tortured leading to his death at the Manamadurai Police station allegedly by the Inspector of Police, Thirupuvanam. The youth was remanded on 7 March 2026,...
>
> — Henri Tiphagne (@Tiphagne) March 8, 2026

## வழக்கறிஞர் ஹென்றி திபேன் கண்டனம்

இதுகுறித்து அவரது எக்ஸ் பக்கத்தில், "திருப்புவனம் அருகே மானாமதுரை காவல் நிலைய போலீசார் விசாரணையின்போது, 26 வயது பட்டியலின இளைஞர் ஆகாஷ் டெலிசன் அடித்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். அதன் விளைவாக அவர் இறந்ததாகக் கூறப்படுகிறது. மார்ச் 7ஆம் தேதி ரிமாண்ட் செய்யப்பட்ட அவர், இன்று காலையில் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். எனவே, இந்த சம்பவத்தில் மாவட்ட ஆட்சியர் வழிகாட்டுதலின் படி, பிரேதப் பரிசோதனை செய்யவேண்டும். உயர் நீதிமன்றம் இந்த வழக்கை தானாக முன்வந்து விசாரிக்க வேண்டும்" எனவும் கோரிக்கை வைத்துள்ளார்.